# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு Backup Server வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்திக் காண்பித்தல்

தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு Backup Server வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்திக் காண்பிப்பதற்காக கொழும்பு - 08, இல.276, எல்விட்டிகல மாவத்தை, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை) விலைமனுக்களை அழைக்கின்றது.

ஆர்வமுள்ள தரப்பினருக்கு 2026.08.06 ஆம் திகதி தொடக்கம் 2026.08.19 ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.2.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.3,000.00 ஐ பணமாக செலுத்தியதன் பின்னர் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் முன்வைப்பதன் பேரில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுதாரர்கள் இது பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், விலைமனு ஆவணங்களை பரீட்சித்தல் மற்றும் விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்தல் என்பவற்றை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவில் மேற்கொள்ள முடியும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் உள்ளடக்கக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்கு Backup Server வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்திக் காண்பித்தல் எனக் குறிப்பிட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 எனும் முகவரிக்கு 2026.08.20 ஆம் திகதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனு ஏற்றுக் கொள்ளல் நிறைவு பெற்ற உடனேயே விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனு திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL)**
**இல.276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08**